# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டுக்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 மாச்சில் சாதகமான எல்லைக்குத் திரும்பின**


**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தொடர்ச்சியாக ஒன்பது அளவீட்டு காலங்களின் பின்னர், 2023 மாச்சில் 51.4 சுட்டெண் புள்ளியினைப் பதிவுசெய்து சாதகமாக மாறியது.** பிரதானமாக பருவகால கேள்வியின் காரணமாக புதிய கட்டளைகள், உற்பத்தி துணைச் சுட்டெண்களில் அதிகரிப்பினால் மாதத்திற்கு மாத இவ்விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது. எனினும், தொழில்நிலை, கொள்வனவுகளின் இருப்பு மற்றும் நிரம்பலர் விநியோக நேரம் துணைச் சுட்டெண்கள் நடுநிலையான அடிப்படை அளவிற்கு கீழேயே காணப்பட்டன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் இவ்வதிகரிப்பானது உணவு மற்றும் குடிபானங்கள் துறையின் தயாரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்த அதேவேளை, எதிர்வரவுள்ள பண்டிகை பருவகாலத்திற்கு வழங்கல்செய்வதற்கு முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் உயர்வான கேள்வியினை அவர்கள் எதிர்கொண்டதாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனினும், அநேகமாக ஓய்வுபெறுதல்கள் மற்றும் பதவிவிலகுதல்கள் பதிலீடுசெய்யப்படாமையின் காரணமாக தொழில்நிலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. மேலும், எதிர்வரவுள்ள காலப்பகுதியில் மூலப்பொருட்களின் விலைகளில் வீழ்ச்சியினை எதிர்பார்த்து புதிய கொள்வனவுகளைத் தாமதப்படுத்தி மூலப்பொருட்களுக்காக தமது கையிருப்புகளை சில நிறுவனங்கள் பயன்படுத்தியமையினால் கொள்வனவுகளின் இருப்பு மாச்சு மாதத்திலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை நிரம்பலர் விநியோக நேரம், மாத காலப்பகுதியில் சிறிதளவு குறுக்கமடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு 51.4**

**2023 மாச்சு**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **42.3** | **51.4** | + | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 41.5 | 55.9 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| உற்பத்தி | 40.0 | 55.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 40.0 | 45.2 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 43.5 | 45.8 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 50.0 | 47.3 | - | நடுநிலையான மட்டத்திலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தற்போதைய பொருளாதார சூழலில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்திகள் மூலம் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்படுத்தலொன்றினை குறித்துக்காட்டியன.

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2023 பெப்புருவரியிலிருந்து 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 மாச்சில் 49.6 கொண்ட பெறுமதியினை பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சியில் இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு. உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, ரஷ்யாவில் இச்சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்தது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் சீர்குலைந்தது. மேலும், சீனாவின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 மாச்சில் நடுநிலையான அடிப்படை மட்டத்தில் காணப்பட்டது

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 ஏப்பிறல் 12 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 மாச்சில் 55.1 சுட்டெண் பெறுமதியினை பதிவுசெய்து, வளர்ச்சி எல்லைக்குத் திரும்பி பணிகள் துறைகளுக்கிடையில் விரிவடைதலொன்றினை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களால் இது தூண்டப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள் காப்புறுதி மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் அதிகரித்தன.

பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்தில் வீழ்ச்சியினை அவதானித்ததன் பின்னர், 2023 மாச்சில் மீளத்திரும்பின. அதற்கமைய, வைப்புகளில் அதிகரிப்புகள் மூலம் நிதியியல் பணிகள் துணைத் துறை தொடர்ந்தும் மேம்பட்ட அதேவேளை, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறையும் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்றினைக் காண்பித்தது. அதேவேளை, மனித நலம், காப்புறுதி, கல்வி, மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. எனினும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறையுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகள், பண்டிகை பருவகாலத்தை நோக்கிய சில மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டமைக்கு மத்தியிலும் தொடர்ந்தும் சீர்குலைந்தன.

பருவகால கேள்விக்கு இடமளிப்பதற்கான சில புதிய ஆட்சேர்ப்புகளுக்கு மத்தியிலும் மாத காலப்பகுதியில் ஏற்பட்ட பதவிவிலகுதல்கள், புலம்பெயர்வுகள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் காரணமாக தொழில்நிலையானது மாச்சில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மாத காலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகளும் மெதுவான வேகத்தில் குறைவடைந்தன.


| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **48.7** | **55.1** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 49.0 | 59.7 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில் நடவடிக்கை | 45.0 | 56.1 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 42.5 | 42.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 43.6 | 46.6 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 63.5 | 70.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்வருகின்ற பண்டிகை பருவகாலம், பொருளாதார நிலைமைகளின் மேம்பாடுகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாடு இறுதிப்படுத்தல் என்பவற்றுக்கு மத்தியில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மாச்சில் உயர்வான வேகத்தில் மேம்பட்டன. எவ்வாறாயிருப்பினும் உயர்வான மின்சாரக் கட்டணங்கள் அத்துடன் அதிகரித்த வரி வீதங்கள் என்பன காரணமாக உயர்வடைகின்ற தொழிற்பாட்டு செலவுகள் பற்றி பல பதிலிருப்பாளர்கள் தொடர்ந்தும் தமது கரிசனைகளை வெளிப்படுத்தினர்.

**பணிகள்**
**கொ.மு.சு 55.1**
**2023 மாச்சு**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 பெப்புருவரியின் 52.6 இலிருந்து 2023 மாச்சில் 54.4 இற்கு உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்துகின்றது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 மாச்சில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2023 ஏப்பிறல் 12 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.